

# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தஞ்சாவூர் வடக்கு, புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் தெற்கு & மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 22.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் வடக்கு | ராயாஸ் கிராண்ட் ஹோட்டல், மகாமகம் குளம் எதிரில், கும்பகோணம். |
| 24.05.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு | கற்பக விநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை. |
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| | மாலை 4.00 மணி | மயிலாடுதுறை | விஜய் மஹால், தரங்கம்பாடி சாலை, மயிலாடுதுறை |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |
| 28.05.2025 புதன்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் மத்திய | அறிஞர் அண்ணா மஹால், கீழவாசல், தஞ்சாவூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 19-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28 இனாம்தார் தோப்பு அண்ணா நகர் முதல் குறுக்குத் தெரு பகுதியில் கல்விநிதியின் கீழ் ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திறந்தவெளி உடற்பயிற்சி மையக் கட்டிடத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், நகரப் பொறியாளர் சிவபாதம், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை மாவட்டம், மல்லாக்கோட்டை கிராமத்திலுள்ள

# கல் குவாரியில் பாறை - மண் சரிந்து விழுந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே 22-

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மல்லாக்கோட்டை கிராமத்திலுள்ள கல் குவாரியில் பாறை மற்றும் மண் சரிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வருமாறு:-

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மல்லாக்கோட்டை கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான கல் குவாரியில் நேற்று முன்தினம் (20.5.2025) காலை எதிர்பாராதவிதமாக பாறை மற்றும் மண் சரிந்து விழுந்த விபத்தில் கல் குவாரியில் பணி செய்துகொண்டிருந்த முருகானந்தம், ஆறுமுகம், கணேசன், ஆண்டிச்சாமி மற்றும் ஒடிசா மாநிலத்தைச் சேரந்த ஹர்ஷித் ஆகிய ஐந்து நபர்கள் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் உடனடியாக மாவட்ட ஆட்சியரைத் தொடர்புகொண்டு மீட்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள அறிவுறுத்தியதோடு, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பி மீட்பு நடவடிக்கைளை மேற்கொள்ளவும்அறிவுத்தினேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மைக்கேல் என்பவருக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழுந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன் பணி நிறைவு பாராட்டு!

# புதுக்கோட்டையில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## அமைச்சர் எஸ்.ரகுபதி வாழ்த்துரை!

புதுக்கோட்டை, மே 22 -

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகர் மன்றம் கட்டட வளாகத்தில் பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்கள் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன் அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா 18.05.2025 அன்று மாலை 7.00 மணியளவில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் நாவுக்கரசர் நாஞ்சில் சம்பத் விழாப்பேருரை யாற்றினார்.

இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையுரையில் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக மதியழகன் சிறப்பாக பணியாற்றி அரசுப் பணியில் ஓய்வு பெற்றுள்ளார். முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் உறுதுணையாக நின்று, கழகத்திற்காக இனிமேல் இரண்டு மடங்கு பணிகள் ரெ.மதியழகனுக்கு காத்திருக்கிறது. அந்தப் பணிகளையும் செவ்வனே அவர் ஆற்றுவார் என்பதையும்,

ரெ.மதியழகனுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசினார்.

இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை மாவட்ட திமுக செயலாளர் கே.கே. செல்லப் பாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர், கவிதைப் பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்து ராஜா, முன்னாள் மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி, அரு.வீரமணி, மூத்த வழக்கறிஞர்கள் திருஞானசம்பந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை.தமிழ் ராஜா, முசிறி தமிழ் மன்னன், மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஸ்வரி, எம்.கே.அறிவுடை நம்பி, இராசு சந்தோஷ், செந்தாமரை பாலு, கார்த்திகை செல்வி, குமார், புதுக்கோட்டை ராஜேஷ், ரெங்கராஜ, முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள் ஆர்.பாலகிருஷ்ணன், இராம.செல்வராஜ், முத்துப்பிள்ளை கர்ணன், ரமேஷ், கவிஞர் பெர்னாட்சா, வழக்கறிஞர்கள் அசோக், இரா.செல்லதுரை, வ.சௌந்தர்ராஜன், ராஜேஷ், பொன் தங்கராஜ், வடகாடு அன்புநிதி, தியாகராஜன், மச்சுவாடி கலையரசன், அ.முருகேசன், சி.திருநாவுக்கரசு, டி.மாதவன், வ.உ.சி நகர் குணா, ஓவியர்கள் ரவி, புகழேந்தி, மருத்துவர் ராமதாஸ், சத்யா பிரிண்டர்ஸ் அறிவழகன், கந்தர்வக்கோட்டை ஜானகிராமன், ராஜா மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக அழகப்பா பல்கலைக் கழக பேராசிரியர் முனைவர் கிருஷ்ணமூர்த்தி அனைவரையும் வரவேற்று பேசினார்.

முடிவில் பத்திரிகையாளர்கள் கே.என்.ஆர்.ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கொண்டயம்பள்ளி க. இராமசாமி
### மே 22 (1991)



**இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டச் செயலாளராக கழகப் பணியாற்ற தொடங்கி, தலைவாசல் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**ஆத்தூர் வட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவராகவும் – வீரகனூர் வீடுகட்டும் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1964ல் நடைபெற்ற இந்தி சட்டஎரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்ததுடன், மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**ராஜிவ்காந்தி படுகொலை செய்யப்பட்டபோது ஏற்பட்ட கலவரத்தில் எதிர்க் கட்சியினரால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பங்கேற்பு!

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

நீலகிரி, மே 22-

நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கே.எம். ராஜு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நீலகிரி மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் 27.5.2025 செவ்வாய்க்கிழமை காலை 11 மணி அளவில் மாவட்ட கழக அவை தலைவர் கே.போஜன் தலைமையில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.



கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி கலந்து கொண்டு, 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து. 2. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் – முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன். கௌதம சிகாமணி அறிவிப்பு!

விழுப்புரம், மே 22-

விழுப்புரம் (தெற்கு) மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (22.5.2025 வியாழக்கிழமை) மாலை 3 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் நடைபெற உள்ளது.



மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி எனது தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் மண்டல தேர்தல் பொறுப்பாளர் கடலூர் (கிழக்கு) மாவட்ட கழக செயலாளர் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் திருக்கோவிலூர் சட்டப்பேரவை உறுப்பினர் முனைவர் க.பொன்முடி சிறப்புரையாற்றுகிறார்கள்.

சட்டப்பேரவை உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி, மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம், தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர்கள் ஜி.கார்த்திகேயன், சிவ,ஜெயராஜ் ஆகியோர் முன்னிலை யில் நடைபெறும் இக்கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள், நகர மன்ற பேரூராட்சி மன்றத் தலைவர்கள் அனைவரும் கலந்துகொள்ள கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி தெரிவித்துள்ளார்.




புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகம் பொன்னமராவதி தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் கொப்பனாப்பட்டியில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுகூட்டத்தீல் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தலைமைக் கழக பேச்சாளர் முகமது இலியாஸ் சாதனை விளக்க உரையாற்றினார். உடன் பொன்னமராவதி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அ.அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூர் கழக செயலாளர் அ.அழகப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.